முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 118/2022

2026ம் ஆண்டு ஜீன் மாதம் 4ம் நாள் வியாழன் கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியம்.

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிகளின் படி வள்ளியூர் முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி திருமதி.A.அன்னலெட்சுமி,M.L., அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ரவிச்சந்திரன் | **சமயம்** | : | -- |
| **த/பெ** | : | தங்க நாடார் | **வயது** | : | 58 |
| **கிராமம்** | : | -- | **தொழில்** | : | -- |
| **வட்டம்** | : | -- | | : | |

**பி.வா.சா.1: வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) வழக்கில் 1வது தபசிலாக காட்டப்பட்ட சர்வே எண். 1214/2 ல் 48 செண்டு நிலம் குமாரசாமி நாடாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. உங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1ம் தபசில் சொத்து வாதியின் தந்தை குமாரசாமி நாடாகுக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருந்தால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கறிஞர் எழுதியுள்ளார். குமாரசாமி நாடாரின் அப்பா பெயர் செல்ல நாடார் என்றால் சரிதான்.

2) செல்ல நாடாரின் மனைவி பெயர் ராம லெட்சுமி என்றால் சரிதான். மேற்படி தம்பதிகளுக்கு குமாரசாமி நாடார், சோமசுந்தரம் நாடார், துரைப்பழம் நாடார் என்ற

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.04 17:39:15 +0530

குட்டி நாடார் மற்றும் அன்ன பாண்டியன் என்று 4 ஆண் மக்கள் உண்டு என்றால் அன்ன பாண்டியன் நாடார் என்பவரை மட்டும் தெரியும் மற்றவரை தெரியாது. குமாரசாமி நாடார், சோமசுந்தரம் நாடார், துரைப்பழம் நாடார் என்ற குட்டி நாடார் மற்றும் அன்ன பாண்டியன் ஆகியோர்கள் சேர்ந்து வழக்கு சொத்துக்களையும் இதர சொத்துக்ளையும் கூட்டாக கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அது போல் செல்ல நாடாரின் மனைவி ராமலெட்சுமி என்பவருக்கு 2 ம் தபசில் சொத்திற்கு வடபுறம் உள்ள சர்வே எண்.1200 மற்றும் இதர சொத்துக்கள் பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது.

3) வழக்கில் கண்ட 2 ம் தபசில் சொத்தை பி.வா.சா.7 மூலம் அன்ன பாண்டியன் என்பவரிடம் இருந்து 26.06.2003 ல் கிரையம் பெற்றுள்ளீர்கள் என்றால் சரிதான். அதற்கு முன்பு 19.12.2001 ல் சோமசுந்தரம் என்பவர் அவரது மகள் இந்திரா செல்வி என்பவருக்கு பி.வா.சா.ஆ. 10 மூலம் நன்கொடை எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. நீங்கள் வழக்கில் பி.வா.சா.ஆ. 10 பத்திரம் என்ன காரணத்திற்கு இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் பாதை கிடையாது என்பதற்காக மேற்படி ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பி.வா.சா.ஆ. 10 ஆவணம் சர்வே எண். 1200/2 சம்பந்தப்பட்டது என்றும் வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றால் அது எனக்கு தெரியாது.

4) நீங்கள் கிரையம் பெற்ற பின்பு வழக்கு 2 ம் தபசில் கட்டுமானம் கட்ட முயற்சி செய்தேன் என்றால் செய்யவில்லை. ஆனால் நான் கட்டுமானம் கட்டிவிடக்கூடாது என்பதற்காக குமார சாமி நாடார் என்பவர் வள்ளியூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 7/2004 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நீங்கள் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். வழக்கை நடத்துவதற்கு வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வழக்கை நடத்தினேன் என்றால் சரிதான். அதனால்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.04 17:39:19 +0530

அந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த வழக்கில் தாவா வழக்கில் கண்ட 1 மற்றும் 2 தபசில் சொத்துக்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1 , 2 தபசில் சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) அந்த வழக்கில் குமாரசாமி நாடார் என்பவர் வாதியாக இருந்து சோமசுந்தரம் நாடார், துரைப்பழம் நாடார் என்ற குட்டி நாடார், அன்ன பாண்டி, இந்திரா செல்வி மற்றும் உங்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் குமாரசாமி நாடார், சோமசுந்தரம் நாடார், துரைப்பழம் நாடார் என்ற குட்டி நாடார் மற்றும் அன்ன பாண்டி ஆகியோர்கள் சேர்ந்து கிரையம் பெற்றதாகவும் அதில் குமாரசாமி நாடாருக்கு 4 ல் 1 பாகம் உரிமை உண்டு என பாகப்பிரிவினை செய்யப்படாத சொத்துக்களை உங்கள் பெயருக்கும் இந்திரா செல்வி என்பவர் பெயருக்கும் ஏற்படுத்திய ஆவணங்கள் குமாரசாமியை கட்டுப்படுத்தாது என்றும் இந்திரா செல்வி மற்றும் நீங்கள் கட்டுமானம் எதுவும் கட்டக்கூடாது என உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்கப்பட்டது என்றால் சரிதான்.

6) அந்த வழக்கு விசாரணைக்கு பின்பு 16.10.2006 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்புக்கு எதிராக வள்ளியூர் சார்வு நீதிமன்றத்தில் A.S.No.89/2007 என்ற மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால்ச ரிதான். அந்த மேல்முறையீடு விசாரணைக்கு பின்பு 16.11.2009 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்புக்கு எதிராக குமாரசாமி நாடார் மாண்பு மிகு சென்னை உயர் நீதிமன்றம் மதுரைக் கிளையில் SA.239/2010 என்ற மேல் முறையீடு தாக்கல் செய்தார்என்றால் சரிதான். அந்த மேல் முறையீடு 07.04.2022 ல் பகுதியாக அனுமதிக்கப்பட்டது என்றும், ராமலெட்சுமி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து தனியாக பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்ய

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.04 17:39:25 +0530

அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ராமலெட்சுமிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் உங்களுக்கு பாத்தியப்பட்ட ஒரு சர்வே எண் உண்டு என்றால் சரிதான். அதன் பின்பு 2 ம் மேல்முறையீடு நிலுவையில் இருந்த சமயத்தில் குமாரசாமி நாடார் காலம் சென்றார் என்றால் சரிதான்.

7) குமார சாமி நாடார் வாரிசுகளான அவரது மனைவி செல்லவடிவு, மக்களான விஜயலெட்சுமி, ஜெயராம், ஜெகசெல்வன்,செல்வஜெயசீலன் , ஜெயக்குமார் மற்றும் ராஜா ராம் ஆகியோர்கள் தரப்பினராக சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்பு குமாரசாமி நாடார் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் இந்த வழக்கு சொத்து சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான்.

8) திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பின்பு உங்கள் பெயருக்கு ஏற்பட்ட கிரைய பத்திரத்தை ரத்து செய்ய வேண்டுமென திருநெல்வேலி மாவட்ட பதிவாளரிடம் மனு கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி மனு விசாரணையில் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் உரிமையியல் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும் படி 29.05.2023 ல் உத்தரவு வழங்கப்பட்டது என்றால் உத்தரவு வழங்கப்பட்டது ஆனால் 2 ம் தபசில் சொத்தில் அவர்களுக்கு உரிமையில்லை என முடிவு செய்யப்பட்டதாக சாட்சி கூறுகிறார். பி.வா.சா.ஆ.4 ல் குமாரசாமி நாடார் வாரிசுகளுக்கு உரிமை இல்லையென முடிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 1201 க்கு வடபுறம் சர்வே எண். 1200 உள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது. சர்வே எண். 1201 க்கு மேற்கு பக்கம் தான் 1ம் தபசில் சொத்தான சர்வேஎண். 1214 உள்ளது என்றால் சரிதான். தெற்கு பக்கம் சர்வே எண். 1201/2 பி உள்ளது என்றால் சர்வே எண் எனக்கு தெரியாது.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.04 17:39:30 +0530

கிழக்கு பக்கம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். நீங்கள் அன்ன பாண்டியனிடம் இருந்து கிரையம் வாங்கும்போது சர்வே எண். 1201 மற்றும் சர்வே எண். 1214 சொத்துக்களை குமாரசாமி நாடார், சோமசுந்தரம் நாடார், துரைப்பழம் நாடார் என்ற குட்டி நாடார் மற்றும் அன்ன பாண்டி ஆகியோர்கள் சேர்ந்து கிரையம் பெற்ற விவரம் தெரியும் என்றால் சரிதான்.

9) மேற்படி 4 நபர்களும் எந்த தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்று தெரியாது என்றால்ச ரிதான். மேற்படி 4 நபர்களும் பாகப்பிரிவினை செய்யும் போது என்ன என்ன பேசிக்கொண்டார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி 4 நபர்களில் அன்ன பாண்டி என்பவர் மட்டும் உயிருடன் இருக்கிறார் என்றும், மற்ற 3 நபர்களும் காலம் சென்று விட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி 4 நபர்களும் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்யும் சமயம் அவரவர் சொத்துக்களுக்கு செல்வதற்கு வசதியாக பாதை ஒதுக்கீடு செய்தார்கள் என்றால் என் பத்திரத்தில் அவ்வாறு சொல்லவில்லை.

10) நீங்கள் கிரையம் வாங்கும் போது மேற்படி 4 நபர்கள் சேர்ந்து கிரையம் வாங்கிய பத்திரத்தை நீங்கள் பார்த்தீர்களா என்றால் நான் பார்க்கவில்லை. அதுபோல் அன்ன பாண்டியன் பெயரில் தனியாக பத்திரம் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் கிரையம் வாங்கும் சமயமே 2ம் தபசில் சொத்தில் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து 1ம் தபசில் சொத்திற்கு செல்வதற்கு பாதை இருந்தது என்றும் அது தெரிந்து தான் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. நீங்கள் கிரையம் பெறும் போது பி.வா.சா.ஆ. 7 கிரைய பத்திரத்தில் வாய்மொழியாக பாகம் வைக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் கிரையம் வாங்கும் போது குமாரசாமி நாடார், சோமசுந்தரம் நாடார், துரைப்பழம் நாடார் என்ற குட்டி நாடார் ஆகிய மூவரும் உயிருடன் இருந்தார்களா என்றால் நான் அவர்களை பார்த்ததில்லை.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.04 17:39:34 +0530

11) நீங்கள் 2ம் தபசில் சொத்தில் உள்ள பாதையை அபகறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் மற்ற 3 நபர்களை சந்தித்து வாய்மொழி பாகம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் தபசில் சொத்திற்கு வழக்கில் கண்ட 3 தபசில் பாதையை தவிர வேறு பாதை கிடையாது என்றால் சரியல்ல. பாதை உள்ளது. மேற்படி பாதை எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண். தெரியாது .

12) தண்ணீர் கால் உள்ளது அந்த கால் வழியாக தான் வாதிகள் சென்று வருகிறார்கள். அந்த தண்ணீர் கால் 1 அடி அகலம் கொண்டது என்றும் அதன் வழியாக விவசாய பொருட்களை மாட்டுவண்டி மூலெமோ, டிராக்டர் மூலமோ கொண்டு செல்ல முடியாது என்றால் சரியல்ல. 4 அடி அகலம் தண்ணீர் கால் உள்ளது. இந்நாள் வரை பயன்பாட்டில் தான் உள்ளது. நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தபசில் சொத்துக்களை பார்வையிட்டு சர்வேயர் மூலம் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆணையர் அறிக்கையில் 4 அடி அகல தண்ணீர் கால் பாதை உள்ளதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

13) ஆணையர் அறிக்கையில் வடக்கு , மற்றும் தெற்கு பக்கம் கம்பி வேலி அமைக்கப்பட்டு கம்பி வேலி இல்லாமல் கல் தூண் மட்டும் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் 2003 ல் கம்பி வேலி அமைக்க முயற்சி செய்த போது தான் குமாரசாமி நாடார் அ.வ.எண். 7/2004 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2003 ல் கம்பி வேலி என்னால் அமைக்கப்பட்டு விட்டது. 2003 ல் நீங்கள் கம்பி வேலி முழுவதுமாக அமைக்கப்பட்டதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நீங்கள் 2003 ல் முழுவதுமாக கம்பி வேலி அமைத்ததாக பொய்யாக கூறுகிறீர்கள் என்றும், கல் தூண் மட்டும் தான் நடப்பட்டது என்றால் சரியல்ல. குமாரசாமி நாடார் வழக்கு தாக்கல் செய்த பின்பும்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.04 17:39:39 +0530

குமாரசாமி நாடாரும், அவரது காலத்திற்கு பின்பு அவரது வாரிசுகளும் , 2ம் தபசில் சொத்தில் உள்ள பாதையை தான் நாளது தேதி வரை பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல.

14) நீங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1ம் தபசில் சொத்திற்கு வடக்கு பக்கம் காற்றலையும், காற்றாலைக்கு பாத்தியப்பட்ட பாதையும் இருப்பதாக கூறினீர்கள் என்றால் சரிதான். காற்றாலையும் , காற்றாலைக்கு செல்லும் பாதையும் காற்றாலை நிறுவனத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இடத்தை வாதிகள் பாதை உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. வழக்கு 3ம் தபசில் பாதையை தான குமார சாமி நாடார் மற்றும் அவரது வாரிசுகளும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், 02.10.2022 ல் நீங்கள் இடையூறு செய்த காரணத்தினால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

15) வழக்கு சொத்துக்கள் அனைத்தும் குமாரசாமி நாடார் மற்றும் அவர் சகோதரர்கள் மூவரும் சேர்ந்து கிரையம் பெற்ற காரணத்தினாலும் , அவர்கள் வாய்மொழியாக பாகம் செய்த சமயம் பாதை உரிமை குமாரசாமி நாடாருக்கு வழங்கி பிரிக்கப்பட்டது என்றும் அதனால் 3ம் தபசில் சொத்தில் பாதை வாதிகளுக்கு உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1ம் தபசில் சொத்திற்கு செல்வதற்கு 3ம் தபசில் சொத்து பாதையை தவிர வேறு பாதை கிடையாது என்றும், அதனால் வாதிகளுக்கு வசதி வழியுரிமை உண்டு என்று சொன்னால் சரியல்ல.

16) நீங்கள் உங்கள் எதிர்வழக்குரையில் சொல்லப்படாத சங்கதிகள் முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றும் அது ஏற்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. 3ம் தபசில் பாதையில் வாதிகளுக்கு உரிமை உண்டு என்று தெரிந்து தான் கிரையம் பெற்றேன் என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.04 17:39:46 +0530

சரியல்ல. வாதிகள் கேட்கும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. உங்களுக்கு கிரையம் கொடுத்த அன்ன பாண்டியன் என்பவரை விசாரணை செய்ய தயாராக உள்ளீர்களா என்றால் அவருக்கு 95 வயதாகிறது எனவே அவரை விசாரிக்க இயலாது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்க கேட்டு சரியென்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.04 17:40:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்